ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2191/28 - 2020 සැප්තැම්බර් මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.09.03

*2191/28 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: BD/HE/LND/5/61.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின்
குறிப்பு இல.: 4-3/9/2016/WS/311.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கும் காணியின் விபரம்:-**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் ஹாலி-எல பிரதேச செயலகத்தின் தெஹிவின்ன கோரளையின் 55ஏ, பல்லேகம கிராம அலுவலர் பிரிவில், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட தலாவ அ.க.சி.18, மேலதிக 6ஆம் பத்திரத்தின் 9 ஆம் இலக்க காணி இல. 256 தொடக்கம் 258 வரை காட்டப்பட்டுள்ள காணியின் முழு விஸ்தீரணம் 5.9517 ஹெக்டயார் கொண்ட (03) காணிகளின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 256 - காணியின் பெயர்: பிடஹஎல்லே பதன; விபரம்: வீட்டுத்தோட்ட நீர் தொட்டியின் ஒரு பகுதி மற்றும் நிரந்தரக் கட்டிடம்; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.2277 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 216, 218 மற்றும் 258; கிழக்கு: துண்டு இல. 258 மற்றும் 257; தெற்கு: துண்டு இல. 258 மற்றும் 257; மேற்கு: துண்டு இல. 216.

**துண்டு இல. 257 - காணியின் பெயர்: பிடஹஎல்லே பதன; விபரம்: வீட்டுத்தோட்ட நீர் தொட்டியின் ஒரு பகுதி மற்றும் நிரந்தரக் கட்டிடம்; உரிமை கோருபவர்: எடம்பிடிய, வேல்லேவேல, சாமலிநிவசயில் வசிக்கும் உடகம லியனகே ரணசிங்க; விஸ்தீரணம்: 0.1770 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 256; கிழக்கு: துண்டு இல. 258; தெற்கு: துண்டு இல. 258, 215 மற்றும் 216; மேற்கு: துண்டு இல. 216 மற்றும் 219.

**துண்டு இல. 258 - காணியின் பெயர்: பிடஹஎல்லே பதன; விபரம்: தோட்டப் பாதை மற்றும் கதுர; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 5.5470 ஹெக்டயார்**

வடக்கு: - ; கிழக்கு: - ; தெற்கு: - ; மேற்கு: - .

1A - G 32796 - 25 (2020/09)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு ஹாலிஎல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். பீ. ஏ. ஜீ. அனுருத்த,
பிரதேச செயலாளர்,
ஹாலிஎல.

பிரதேச செயலகம்,
ஹாலிஎல,
2020, ஓகத்து 29.

09 - 414

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: NCP/MG/L02/பொது/07/04.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/9/2010/IR/06 - 2015.06.12.

2017.06.07 ஆந் திகதிய 2022/22 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட காணித் துண்டுகள் இரண்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் அதனை பின்வருமாறு திருத்தம் செய்து பிரசுரிக்கப்படுகிறது.

மொரகஹகந்த, களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் மெதிரிகிரிய கந்தளாய் வீதியை நிர்மாணிப்பதற்காகத் தேவைப்படும் கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கும் காணியின் விபரம்:-**

வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவில் சிங்கள பற்று சிறு பிரிவில், இல. 100, பிசோபண்டாரகம, கி.உ. பிரிவில் பிசோபண்டாரகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் கெ. சி. இல. 120056, வலயம் 11 இன் தாள் இல. 03 ஆம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள்:

**1. துண்டு இல. 173**
காணியின் பெயர்: மெதிரிகிரிய யாய; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; அத்துமீறிக் குடியேறியவர்: திக்கல்புரயில் வசிக்கும் கஸ்தூரி ஆரச்சிகே சமந்த விஜய குமார்; விஸ்தீரணம்: 0.0246 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 177**
காணியின் பெயர்: மெதிரிகிரிய யாய; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; அத்துமீறிக் குடியேறியவர்: திக்கல்புரயில் வசிக்கும் அசுரமுணி நெல்சன் சில்வா; விஸ்தீரணம்: 0.1426 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு மெதிரிகிரிய பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சீ. எம். கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
மெதிரிகிரிய.

பிரதேச செயலகம்,
மெதிரிகிரிய.

09 - 415

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.